# திருகோயிற் கட்டடக்கலை வளர்ச்சியில் கோபுரக் கட்டுமானம்: உருத்திரபுரீஸ்வரர் கோயிலை அடிப்படையாகக் கொண்டது

**தமிழ்ச்செல்வி.ப**

**ஆய்வுச்சுருக்கம்:**

இந்துப் பண்பாட்டு மரபில் கோயில்கள் தமக்கெனத் தனித்த ஓர் அடையாளத்தைக் கொண்டு காலங்காலமாக விளங்கி வருவதனை அவதானிக்க முடிகின்றது. அந்தவகையிலே இத்திருக் கோயில்கள் ஒவ்வொன்றும் கலைகளின் பிறப்பிடமாகவும் அக்கலைகளை வளர்த்தெடுக்கும் நிறுவனங்களாகவும் காலந்தோறும் செயற்பட்டு வருகின்றமையை அவதானிக்க முடிகின்றது. கலைகளுக்கு எல்லாம் தாய்க்கலையாகத் தொன்றுதொட்டு விளங்கி வருவது கட்டடக்கலை ஆகும். இக்கட்டடக் கலையானது திருக்கோயில் ஒன்றின் வளர்ச்சி நிலையில் மிகவும் முக்கியம் பெற்ற ஒன்றாக விளங்குவதனை அவதானிக்க முடிகின்றது. அந்தவகையிலே திருக்கோயிற் கட்டடக்கலை வளர்ச்சி நிலையினை ஆரம்ப காலந்தொட்டு இன்று வரைக்கும் பல்வேறு நிலைகளின் ஊடாக அவதானிக்க முடிகின்றது. திருக்கோயிற் கட்டடக்கலை வளர்ச்சியில் உன்னதமான வளர்ச்சி நிலையைப் பிரதிபலிப்பதாகவே கோபுரக் கட்டுமானம் அமைந்துள்ளது. ஆலயமானது உருவாக்கம் பெற்றதுமே பூரணமான வளர்ச்சி நிலையினை எட்டிவிடாது. அது சிறிது சிறிதாகவே வளர்ச்சி காண்கிறது. ஆலயத்தைச் சூழ உள்ள குடிகள் ஒவ்வொன்றினதும் பொருளாதார ரீதியிலான வளர்ச்சி நிலையே ஆலய வளர்ச்சியின் அடித்தளமாக அமைகிறது. அந்தவகையிலே ஈழத்தில் சப்த ஈஸ்வரங்களில் ஒன்றாகவும் மிகவும் பழமை வாய்ந்த திருக்கோயிலாகவும் அமைந்து காணப்படுகின்ற உருத்திரபுரீஸ்வரர் சிவாலயம் ஆரம்ப காலத்தில் சாதாரணமான ஒரு வழிபாட்டுத் தலமாக இருந்து படிப்படியாக வளர்ச்சி பெற்று இன்று ஒருதளக் கோபுரக் கட்டுமானத்தோடு கூடிய பிரம்மாண்டமான ஆலயமாக பரிணமித்திருக்கின்றதனைக் காணமுடிகின்றது. உருத்திரபுரீஸ்வரர் ஆலயக் கட்டடக்கலையின் கட்டுமான வளர்ச்சி நிலையையும் ஒருதளக் கோபுரக் கட்டுமான வளர்ச்சியினைப் பற்றிய விடயங்களையும் வெளிப்படுத்துவதாகவே இந்த ஆய்வானது அமைந் திருக்கின்றது. வரலாற்றியல் ஆய்வு மற்றும் விபரண ஆய்வு எனும் முறையியல்களுக்கு அமைவாக இந்த ஆய்வானது கட்டமைக்கப்பட்டுள்ளது. அத்தோடு கள ஆய்வின் ஊடாகப் பெறப்பட்ட தரவுகள் உள்ளடக்கப் பகுப்பாய்விற்கு உட்படுத்தப்பட்டு இந்த ஆய்வானது முன்னெடுக்கப்பட்டுள்ளது.

**திறவுச்சொற்கள்:** திருக்கோயில், கட்டடக்கலை, கோபுரக்கட்டுமானம், உருத்திரபுரீஸ்வரம், ஒரு தளக்கோபுரம்

இந்துநாகரிகத்துறை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
thamilchselvi1460@gmail.com